**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்தியவானிலைத்துறை**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம், கோவை**
**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(20.01.2024 முதல் 24.01.2024)**

**அறிக்கை எண் 006/2024** **தேதி.19.01.2024**

## மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 19°செ முதல் 23°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 24°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 4°செ முதல் 8°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

## கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை

கோயமுத்தூர் மாவட்டத்தின் 16.01.24 முதல் 18.01.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 31°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 19°C முதல் 21°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 83 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 36 சதவிகிதமாகவும் பதிவானது. சுராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4-8 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

## கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவாரவானிலை (16.01.2024 முதல் 18.01.2024) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 24.01.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 16/01 | 17/01 | 18/01 | தேதி | நாள்-1 20/01 | நாள்-2 21/01 | நாள்-3 22/01 | நாள்-4 23/01 | நாள்-5 24/01 |
| 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 0 | 0 | 0 | 0 |
| 31 | 31 | 31 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 32 | 32 | 31 | 31 | 31 |
| 21 | 20 | 19 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 22 | 21 | 21 | 22 |
| 4 | 4 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 1 | 5 | 6 | 4 |
| 83 | 77 | 81 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 51 | 36 | 40 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 40 |
| 4 | 8 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 10 | 10 | 10 | 8 |
| 360 | 360 | 90 | காற்றுவீசும் திசை | 70 | 70 | 70 | 70 | 70 |

## எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (20.01.2024 முதல் 24.01.2024)

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31°செ முதல் 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ முதல் 22°செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ளதொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன்பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| **20-01-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **21-01-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **22-01-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **23-01-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **24-01-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்து வரும் நாட்களில் மேற்கு மண்டல பகுதிகளில் 4 -10 கி.மீ வேகமான காற்றுடன் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது.<br>மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்து பயிர் கழிவு மூடாக்கு இடவும்.<br>வறண்ட வானிலையினைப் பயன்படுத்தி அறுவடை நிலையிலுள்ள பயிர்களில் உடனடியாக அறுவடை செய்து அறுவடை செய்து நன்கு உலர்த்தி சேமிக்கவும்.<br>அறுவடை முடிந்த பிறகு நிலத்தினை கொத்து அல்லது சட்டிக் கலப்பை கொண்டு உடனடியாக உழுவதன் மூலம் களைகளை கட்டுப்படுத்துவதுடன் கோடை கால மழையின் ஈரப்பத்ததை சேகரிக்கலாம்.<br>பயிர் கழிவுகளை எரிக்காமல், நிலத்தில் உழுவதன் மூலம் பயிர் கழிவுகள் எளிதில் மட்கும். |
| நெல் | அறுவடை பருவம்<br>பூக்கும் பருவம் | வறண்ட வானிலையினைப் பயன்படுத்தி அறுவடை நிலையிலுள்ள சம்பா நெல்லினை அறுவடை செய்து நன்கு உலர்த்தி சேமிக்கவும். முடிக்கவும்.<br>நிலவும் குளிர் வெப்பநிலையில் பூக்கும் தருணத்தில் உள்ள நெற்பயிரில் மணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க 2 சதவீதம் டிஏபி (DAP) கரைசலை தெளிக்கவும்.<br>நீர்ப்பாசனம் உள்ள இடங்களில் நவரை பருவ நெல் நடவினை நீர் மறைய நீர்கட்டு முறையுடன் மேற்கொள்ளவும். |

| | | |
|---|---|---|
| கரும்பு | நடவு | தற்போது நிலவும் காலநிலையை கருத்தில் கொண்டு முன் பருவ கரும்பு சாகுபடியை உடனடியாக மேற்கொள்வதன் மூலம் அதிக மகசூல் பெறலாம். |
| மஞ்சள் | வளர் பருவம் | தற்போது நிலவும் வானிலையால் மஞ்சளில் இலைக்கருகல் நோய் வர வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த மேங்கோசெப் என்ற பூஞ்சான கொல்லியை ஒரு லிட்டர் தண்ணருக்கு 2 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்கவும். |
| வாழை | | தற்போது நிலவும் வானிலையால் வாழையில் சிக்காடாக்கோ இலைப்புள்ளி நோய் குறிப்பாக மண் ஈரம் அதிகமான இடங்களில் வர வாய்ப்புள்ளது. வயலை காயவிட்டு நோய்தாக்கிய இலைகளை பறித்து எரித்து விடவும், மேலும் ஒரு லிட்டர் தண்ணீருக்கு கார்பன்டசிம் 1 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்கவும். |
| கால்நடைகள் | | கோமாரி நோய் வராமல் இருக்கவும், வந்த இடத்திலிருந்து மற்ற இடங்களுக்கு பரவாமல் தடுக்கவும் 200 கிராம் சோடியம் ஹைட்ராக்ஸைடை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து மாட்டு கொட்டகைகள் மற்றும் மாடு கட்டும் இடங்களிலும் தெளிக்க வேண்டும். மேலும் இந்த நோயினால் மாட்டு குளாம்பு மற்றும் கால் பகுதிகளில் ஏற்படும் புண்களில் மஞ்சள் பொடி கலந்த வேப்ப எண்ணெயை தடவவும்.<br>தற்போது நிலவும் வானிலையால் கறவை மாடுகளில் மடிவீக்க நோய் பரவ வாய்ப்புள்ளது. எனவே ஒரு சதம் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு பால் கறப்பதற்கு முன்னும் பின்னும் மடியை சுத்தம் செய்யவும். |

## குறுஞ்செய்தி

- நீர்ப்பாசன வசதி உள்ள இடங்களில் மட்டும் நவரை பருவ நெல் நடவினை நீர் மறைய நீர்கட்டு முறையுடன் மேற்கொள்ளவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**